## தேசிய நீரியல் வள ஆய்வு அபிவிருத்தி முகவராண்மை – 2016

-----------------------------------------------------------------------------------------------------

தேசிய நீரியல் வள ஆய்வு அபிவிருத்தி முகவராண்மையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1996 இன் 32 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1981 இன் 54 கொண்ட தேசிய நீரியல் வள ஆய்வு அபிவிருத்தி முகவராண்மை சட்டத்தின் 32(3) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் முகவராண்மையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி முகவராண்மையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை தேசிய நீரியல் வள ஆய்வு அபிவிருத்தி முகவராண்மையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

**(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01**

நியமத்தின் 48 ஆம் பந்திக்கு முரணாக 03 சந்தர்ப்பங்களில் செலுத்த வேண்டியிருந்த கூட்டுப்பெறுமதி ரூபா 891,691 தொகைக்கான கடன்கொடுத்தோர் மீதியை கடன்பட்டோர்களில் இருந்து கழித்து காட்டப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான கடன்பட்டோர் அதே தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 08**

நியமத்தின் 22 மற்றும் 100 ஆம் பிரிவுகளின் பிரகாரம் 2006 ஆண்டு முதல் 2015 ஆண்டு அக்தோபர் வரை ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் ஆகியவற்றிற்காக பங்களிப்புத் தொகை செலுத்தாமையால் செலுத்த வேண்டியிருந்த நிலுவைத் தொகை முறையே ரூபா 5,333,724 தொகை மற்றும் ரூபா 44,368,612 தொகையும் அதற்கான மிகை விதிப்புத் தொகை முறையே ரூபா 2,626,544 தொகை மற்றும் ரூபா 22,184,306 தொகைகளுக்காக மீளாய்வாண்டிற்கான கணக்குகளில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு அல்லது வெளிப்படுத்தல் மேற்கொண்டோ இருக்கவில்லை.

### 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

கணனி மென்பொருள் முறைமையொன்று கொள்வனவு செய்வதற்காக 06 வருடங்களுக்கு முன்னர் வெளி நிறுவனமொன்றிற்கு செலுத்தியிருந்த ரூபா 404,010 தொகைக்கான முற்பணத்தை தீர்ப்பதற்கு மற்றும் 06 மீன்பிடி துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்காக சாத்தியக்கூறு ஆய்வு அறிக்கை தயாரிப்பதற்காக வெளி நிறுவனம் ஒன்றிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 1,612,898 தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைக் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள்விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1981 இன் 54 ஆம் இலக்க தேசிய நீரியல்வள ஆய்வு அபிவிருத்தி முகவராண்மைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவு | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் விஞ்ஞான மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவி இருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| (i) நிதிப் பிரமாணம் 757(2) | மீளாய்வாண்டிற்கான பொருட்கள் மெய்மையாய்தல் அறிக்கை கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 104 | 2009 ஆண்டின் போது ரூபா 411,000 தொகைக்கு கொள்வனவு செய்திருந்த கணனி மென்பொருள் ஒன்றின் உட்படுத்தியிருந்த பெறுமதி ரூபா 52,000 இற்கான கணனி ஒன்று 2012 ஆண்டின் போது காணாமல் போயிருத்தல் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (இ) 2015 ஜுலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவருக்கு ஒரு சந்தர்ப்பத்தில் வழங்கக் கூடிய முற்பணத் தொயையின் உச்ச மட்ட வரையறை ரூபா 100,000 தொகை எனினும் முகமராண்மையினால் 2016 ஏப்ரல் 20 ஆம் திகதி ரூபா 150,000 முற்பணமொன்று வழங்கப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான முகவராண்மையின் நிதி விளைவுகள் ரூபா 3,224,167 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 17,330,479 தொகையாகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 20,554,646 இனால் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டின் போது உடன்பட்டிருந்த சேவைகள் மற்றும் ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தி செலவுகள் முறையே ரூபா 5,021,273 இனால் மற்றும் ரூபா 23,531,700 இனால் அதிகரித்திருந்த போதிலும், அரசாங்க மானியம் ரூபா 40,679,900 இனால் அதிகரித்திருத்தல் மேற்கூறிய வளர்ச்சிக்கு முக்கியமான காரணமாக இருந்துள்ளது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 வருடங்களினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்யும் போது 2012 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்த போதிலும் 2016 ஆண்டின் போது மிகையொன்று ஏற்பட்டிருந்தது. நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மீண்டும் சீராக்கல் மேற்கொண்ட போது 2012 ஆண்டின் போது ரூபா 123,494,212 இற்கான பங்களிப்பு 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 369,231,183 தொகை வரை இடையறாமல் வளர்ச்சியடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

1981 இன் 54 ஆம் இலக்க தேசிய நீரியல் வள ஆய்வு அபிவிருத்தி முகவராண்மை சட்டத்தின் பிரகாரம் முகவராண்மையின் குறிக்கோள்கள் மற்றும் கருமங்கள் கீழே குறிப்பிடப்படுகின்றன.

- நீரியல் வளங்கள் மீது விடயம் தொடர்பாக தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை அமுல் நடத்துவதற்காக விஞ்ஞான தொழிநுட்ப நிபுணத்துவத்தை ஈடுபடுத்தல் மற்றும் பயன்படுத்தல் என்பவற்றை உறுதிப்படுத்தல்.

- நீரியல் வளங்களை இனங்காணல், பெறுமதி மதிப்பீடு செய்தல், முகாமைத்துவப்படுத்தல், பாதுகாப்பு மற்றும் அபிவித்தி நோக்கத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட, முக்கிய பரப்புகள் தொடர்பான ஆய்வு விடயங்களை மேம்படுத்துதல் மற்றும் நடாத்திச் செல்லல் அது தொடர்பான தொழிநுட்ப மற்றும் சட்ட விடயங்கள் தொடர்பான அறிவுரைகள் மற்றும் அனுசாசன சேவை வழங்குதல், அவ்விடயங்களில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் விடயங்களை கூட்டிணைப்பு செய்தல், அதற்காக பயன்தரக் கூடிய தகவல்கள் மற்றும் தரவுகளை சேகரித்தல், விரிவாக்கல், வெளியிடுதல் மற்றும் ஏற்றுக்கொள்ளல் தேவையான பயிற்சிகளை வழங்குதல் மற்றும் விதிக்கப்பட்ட அனைத்து அதிகாரச் செய்பணிகள் மற்றும் கருமங்களை செயற்படுத்துதல் மற்றும் நிறைவேற்றுதல் காட்டப்பட்டிருந்தது.

இக் குறிக்கோள்களை நிறைவேற்றுவது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நீரியல் வளங்களை இனங்காணல், மதிப்பீடு செய்தல், முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி தொடர்பான விடயங்களுக்காக ஆலோசனைகள், நிபுணத்துவ அறிவு வழங்குதல், ஆய்வு விடயங்களை மேம்படுத்துதல் மற்றும் அவ்விடயங்களில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் விடயங்களை கூட்டிணைத்தல் முகவராண்மையின் குறிக்கோளாக இருந்த போதிலும், நன்னீர் நீர்த் தேக்கங்களில் மீன் அறுவடையை மேம்படுத்தல் தொடர்பாக மற்றும் அறுவடைக்கு பின்னர் மேம்படுத்தல் மீதான ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு ஆலோசனைகள் வெளியிட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் குறிப்பிட்ட குறிக்கோள்கள் நிறைவேற்றுவதற்காக முகவராண்மை காட்டும் கவனம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் முன்னேற்ற அறிக்கைகளை பரிசோதனை மேற்கொண்ட போது 54 ஆய்வுச் செயற்திட்டங்களுக்காக ரூபா 95.74 மில்லியன் தொகை ஏற்பாடுகள் ஒதுக்கியிருந்ததுடன் அவற்றில் ரூபா 91.61 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. 25 நிகழ்ச்சித் திட்டங்கள்/ செயற்திட்டங்கள் செயற்படுத்தலின் பௌதீக முன்னேற்றம் 52 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டதுடன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களில் பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மொதா மீன் வளர்ப்பிற்காக குறைந்த செலவு, அதிக போஷாக்கு பெறுமதியினை உடைய மீன் உணவு ஒன்றினை உற்பத்தி செய்வதற்காக ஐக்கிய நாடுகளின் உலக உணவு மற்றும் விவசாய அமைப்பின் கீழ் ரூபா 3,585,496 தொகை மற்றும் திறைசேரி ஏற்பாடுகள் ரூபா 1,600,000 தொகை கிடைத்திருந்ததுடன் அவற்றில் ரூபா 2,262,926 தொகையொன்று மீளாய்வாண்டு வரை செலவிடப்பட்டிருந்த போதிலும் குறைந்த விலையில் மீன் உணவு ஒன்றினை உற்பத்தி செய்து வளர்ப்போருக்கு அறிமுகப்படுத்தி இருக்கவில்லை. அதன் காரணமாக இந்த செயற்திட்டத்தின் மூலம் மொதா மீன் வளர்க்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள சிறு அளவிலான விவசாயிகளின் வருடாந்த வருமான நிலைமையை உயர்த்துதல் மற்றும் தரம்சார் மீன் உணவு வகைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் மீனவ சமூகத்தின் எழிமையை ஒழித்தல் ஆகிய குறிக்கோள்களை நிறைவேற்றியிருக்கவில்லை.

(ii) மீன்களை ஒன்று திரட்டும் பொறி வைக்கும் முறை மற்றும் ரேடியோ மிதவைகளை பயன்படுத்தி ஆழ்கடலில் சூரை மீன் பிடிப்பதற்காக சுற்றாடல் மற்றும் மூலவளப் பற்றுள்ள புதிய உபகரணம் ஒன்றினை செய்வதற்கான செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,440,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 1,412,535 தொகை செலவிடப்பட்டிருந்தது. மீன்களை ஒன்று திரட்டும் 03 பொறிமுறைகளை வடிவமைத்திருந்ததுடன் அவற்றில் 01 மாத்திரம் மீளாய்வாண்டு செப்தெம்பர் 29 திகதி கல்முனைப் பகுதியில் நிறுவப்பட்டிருந்தது. மீதியாகவுள்ள பொறிமுறைகள் 2 உம், 2017 ஜூலை வரையும் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டதுடன் நிறுவப்பட்டிருந்த மீன்களை ஒன்று திரட்டும் பொறிமுறையினை 2017 ஆண்டின் போது மீனவர்களினால் வெட்டி அகற்றப்பட்டிருந்தது.

(iii) சந்தையில் உயர்ந்த விலையொன்று காணப்படும் இரண்டு வகையான விஷேட அலங்கார மீன்களினை இனப்பெருக்கம் செய்வதற்காக தொழிநுட்பத்தை முன்னேற்றும் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1.07 மில்லியன் தொகையில் ரூபா 1.02 மில்லியன் செலவிடப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதன் எதிர்பார்த்த குறிக்கோளாகிய இறக்குமதி செய்யப்பட்ட மீன் எண்ணிக்கை குறைத்து ஏற்றுமதி மீன் எண்ணிக்கையை அதிகரித்தல், உள்நாட்டு வளர்ப்போரை மேம்படுத்தலும் அவர்களின் வருமானத்தை அதிகரித்தலும் ஆகிய குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டுள்ளனவா என தொடர் செயல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு மதிப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) விஷேட கடல் இறால் வகைக்கான வினைத்திறன் உடைய உபகரண முறைமை ஒன்றினை அறிமுகப்படுத்துவதன் மூலம் இறால் விளைச்சலில் தரம்சார் தன்மையின் அபிவிருத்தி செய்வது மற்றும் விளைச்சலின் பின்னரான சேதங்களை குறைப்பதை குறிக்கோளாக் கொண்டு 2014, 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது முறையே ரூபா 399,000 தொகை, ரூபா 591,094 தொகை மற்றும் ரூபா 341,100 தொகை என கூட்டுத்தொகை ரூபா 1,331,194 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் கடல் இறால்களுக்கான பொருத்தமான உபகரண முறைமை ஒன்றினை அறிமுப்படுத்தியிருக்கவில்லை.

(v) ஹம்பாந்தோட்டை மாவட்டத்தை சார்ந்த பகுதிகளில் சனசமூக பங்குபற்றல் ஊடாக அலங்கார மீன்வளர்ப்பு மற்றும் நோய் முகாமைத்துவத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,130,000 இற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக ரூபா 1,223,300 தொகை செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு மார்ச் மாதத்தின் போது சேற்றுக் குளங்களில் மீன் குஞ்சுகள் வைப்புச் செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும் அது ஜுலை 28 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் மீன்கள் இறக்கும் காரணத்தினால் செயற்திட்டம் தோல்வியடைந்தது. மேலும், நோய் முகாமைத்துவம் பற்றிய போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(vi) ஹம்பாந்தோட்டை மற்றும் மாத்தறை மாவட்டங்களைச் சார்ந்த சிறிய நீர் பிரதேசங்களில் மீன்கள் மற்றும் இறால் வளர்பினை பரப்புவதற்காக ரூபா 740,000 இற்கான நிதியேற்பாடுகள் செய்யப்பட்டு அவற்றில் ரூபா 750,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் மாத்திரம் இறால் வளர்ப்பு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இச்செயற்திட்டம் கடந்த இரண்டு ஆண்டுகளின் போது அப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், இச் செயற்திட்டத்தின் மூலம் மீன்கள் மற்றும் இறால்கள் வளர்ப்பினை பரப்புவதற்கான குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(vii) கழுத்துறை மாவட்டத்தில் அலங்கார மீன்கள் வளர்ப்போரின் வாழ்க்கை தரத்தினை முன்னேற்றும் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 2,320,000 தொகை நிதியேற்பாடுகள் கிடைத்திருந்ததுடன் ரூபா 1,973,700 தொகை செலவிடப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் கீழ் மன்னயா மீன் வகையைப் பயப்படுத்த மீன் உணவுகள் உற்பத்தி செய்தல் மற்றும் தொழிநுட்ப அறிவினை பொதுமக்களுக்கு வழங்குதல், மீன்களின் நோய்களை இனங்காணல் மற்றும் அடிப்படை சிகிச்சை முறைகள் தொடர்பாக மீனவர் பிரஜைகளை அறிவுறுத்தல், இரண்டு வயையான அலங்கார மீன்களின் தரம்சார் தன்மையினை அபிவிருத்தி செய்தல் ஆகிய விடயங்கள் திட்டமிட்டிருந்த போதிலும் ஒரு வகையான அலங்கார மீன்களின் தரம்சார் தன்மையினை அபிவிருத்தி செய்வது தொடர்பாக மாத்திரம் கவனம் செலுத்தப்பட்டிருந்தது. ஏனைய திட்டங்கள் ஏதும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(viii) இறால் உற்பத்தியை அபிவிருத்தி செய்வதற்கான பல்வேறு வளர்ப்பு வலயங்களில் பிரோபயோடிஸ் பயன்படுத்தல் மற்றும் நீர் தரம் முகாமைத்துவத்தை பரிசோதனை செய்வதற்கான ரூபா 770,000 இற்கான ஏற்பாடுகளில் இருந்து ரூபா 679,000 தொகை செலவிடப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அப் பரிசோதனைகளின் விளைவுகளின் பிரகாரம் சரியாக பயன்படுத்திய நடைமுறை தொடர்பான அறிவு உரிய சாராருக்கு வழங்குவதற்காக மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ix) நீர்கொழும்பு கலப்பை சார்ந்த பிரதேசங்களில் பரம்பரையாக மீன்பிடி முறை ஒன்றாக பயன்படுத்தப்படும் கண்டல் மரத் தோப்பு தாவரங்களின் கொப்புகளைப் பயன்படுத்துதல் மற்றும் அவற்றின் விளைவுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நீர்கொழும்பு ஆற்றுமுகத்தில் மீன்கிளை உற்பத்திக்காக நீரின் தரம், உணவு பாங்கு மற்றும் சனசமூக பங்குகொள்ளல் முகாமைத்துவத்தை பரிசோதனை செய்தல் ஆகிய செயற்திட்டங்களுக்காக ரூபா 380,000 தொகை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு ரூபா 400,000 தொகை செலவிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அந்த ஆய்வுகளில் விளைவுகளின் நலன்களை மீனவ சமுகத்துக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(x) இறால் வளர்ப்பில் காணப்படும் வெள்ளை புள்ளி நோயை முகாமைத்துவப்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,420,000 இற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 1,411,800 தொகை செலவிடப்பட்டிருந்தது. இந்த பரிசோதனை 07 குறிக்கோள்களை அடிப்படையாக வைத்து மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அவற்றில் இரண்டு குறிக்கோள்கள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தது. இறால் வளர்ப்போருக்காக வைரஸ் நோயை குறைப்பதால் தாய் மீன்களை சுகதேகியாக வைப்பதற்கான நடைமுறைகள் மற்றும் குறைந்த கிரயத்துடனான பாதுகாப்பு பரிசோதனைத் தொகுதிகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் வெள்ளைப் புள்ளி வைரஸ் நோய் இறால் பண்ணைகளில் பரவும் முறை மற்றும் பல்வேறு மரபுக் காட்சிகளை இனங்காணல் ஆகிய குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(xi) கடல் அல்கா மிகவும் சிறந்த மரபணு என்று இணைவில் இருந்து பெற்றுக்கொள்வதற்கு ஆய்வுகள் மேற்கொள்ளல் மற்றும் வளர்ப்போருக்கு அந் நலன்களை வழங்கும் குறிக்கோளுடன் நீர்த் தாவரங்கள் மற்றும் கடல் அல்கா எண்ணிக்கைக்காக இழைய வளர்ப்பு அறிமுகப்படுத்தல் ஆகிய செயற்திட்டங்களுக்காக ரூபா 1,020,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 943,000 தொகை செலவிடப்பட்டு செயற்திட்டம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதன் பெறுபேறுகளை வளர்ப்போருக்கு வழங்கியிருக்கவில்லை.

(xii) நுண் அல்கா வளரப்பு மற்றும் தெரிவு செய்யப்பட்ட உயர்ந்த பொருளாதாரப் பெறுமதி ஒன்றினை கொண்டுள்ள கடல்நீர் விஷேட அலங்கார மீன்களின் இனவிருத்தி செய்தல் மற்றும் வளர்த்தல் ஆகிய செயற்திட்டத்திற்காக ரூபா 370,000 தொகைக்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் ரூபா 296,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் குறிக்கோளான கடல் குதிரை பெண் குதிரைகளின் பெருக்கம் மற்றும் வளர்ப்பபு முறைகளை கற்றல் மற்றும் இலங்கையின் சுற்றாடல் நிலைமைகளுக்கு மிகவும் பொருத்தமான மற்றும் மிகவும் பயன்படுத்தப்படக் கூடிய விஷேட அல்காக்களுக்கான ஆய்வு மேற்கொள்ளல் மற்றும் அத்தியவசிய விஷேட அல்கா வளர்ப்பு வளர்ப்போருக்கு மாதிரிகளை வழங்குதல் இந்த செயற்திட்டத்தை தெரிவு செய்வதற்கான காரணம் தற்போது கடல்நீர் அலங்கார மீன் ஏற்றுமதி இயற்கை சுற்றாடலில் இருக்கும் மீன்களைப் பிடித்தலின் ஊடாக நடைபெறுவதினால் இதன் மூலம் சுற்றாடலுக்கு சேதம் போலவே அவ் விஷேட இயற்கை சுற்றாடலில் இருந்து அகலும் அச்சுருத்தலும் காணப்படுவதினால் இச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் அந்த நலன்களை வளர்ப்போருக்கு வழங்கியிருக்கவில்லை.

(xiii) மீன் விளைச்சலின் தரம்சார் தன்மை சேதமடைதல் மற்றும் அவற்றை தவிர்ப்பதற்காக எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் மீதான விஞ்ஞான ரீதியான கற்கை ஆகிய செயற்திட்டத்திற்காக ஏற்பாடு செய்திருந்த ரூபா 4,360,000 இற்கான ஏற்பாடுகளில் இருந்து ரூபா 3,568,600 தொகை செலவிடப்பட்டிருந்தது. நீர்கொழும்பு, குடாவெல்ல, புராணவெல்ல, மன்னார், திக்ஓவிட ஆகிய கரையோர பகுதிகளில் பலநாள் பிரயாண படகுகள், வள்ளங்கள் மூலம் பெற்றுக்கொள்ளும் மீன்கள் மற்றும் இறக்குமதி செய்யும் மீன்களின் தரம்சார் மதிப்பீடு தொடர்பாக 2016 வருட இறுதி அளவில் ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட 05 கரையோரப் பகுதிகளில் உணவுக்காக எடுக்கப்படும் மீன்களின் தரம்சார் தன்மை குறைந்த தரத்தில் காணப்படுகின்றது எனவும் பல நாட்கள் படகுகளின் மீன்களின் தரம்சார் தன்மையை பாதுகாப்பதற்காக தேவையான வசதிகள் காணப்படவில்லை என இனங்கண்டிருந்த போதிலும் அப் பலவினங்களை குறைப்பதற்காக நடைமுறை ஏதும் தயாரித்திருக்கவில்லை.

(xiv) போசாக்கு தன்மையுள்ள உணவுகளை அறிமுகப்படுத்துவதற்காக நீரியல் வளங்களை பயன்படுத்துவதன் மூலம் பெறுமதியை கூட்டி உற்பத்திகளை அறிமுகப்படுத்தும் செயற்திட்டத்திற்காக ரூபா 2,470,000 தொகை ஏற்பாடு செய்திருந்ததுடன் ரூபா 2,234,800 தொகை செலவிடப்பட்டிருந்தது. மீன்களைப் பயன்படுத்தி தகர டப்பா உணவுகள் உற்பத்தி செய்வதற்காக பரிசோதனைகள் மேற்கொள்ளல், கெட்லர் விஷேட மீனினத்தின் கழிவுப்பொருட்களை பயன்படுத்தி கொலொஜின் பிரித்தெடுத்தல், சாடினெல்லாவை பயன்படுத்தி எண்ணெய் பிரித்தெடுத்தல் மற்றும் சுத்தம் செய்தல், மீன் பிஸ்கட் வகைகளை உற்பத்தி செய்வதற்காக திட்டமிட்டிருந்தது. குறிப்பிட்ட செயற்திட்டம் முடிவடைந்திருந்த போதிலும், ஆய்வு கண்டுபிடிப்புகளின் விளைவுகள் அவற்றின் மீது கரிசணை காட்டும் சாராருக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(xv) மீன்கள் மீன் உற்பத்திகளின் தரம், போஷாக்குள்ளானவை மற்றும் பாதுகாப்பு மீதான ஆய்வு செய்யும் செயற்திட்டத்தை ஆரம்பிக்கப்பட்டு மீளாய்வாண்டின் போது அதற்காக ரூபா 4,360,000 இற்கான ஏற்பாடுகளின் கீழ் ரூபா 3,568,600 தொகை செலவிடப்பட்டிருந்தது. அவற்றில் மீளாய்வாண்டின் போது மீன் உணவு நுகர்வின் மூலம் நுகர்வோரின் சரீரத்திற்கு உட்புகும் விஷப் பகுதிகளை பகுப்பாய்வு செய்திருந்ததுடன் விஷேட மீன்களின் பாரஉலகம் மிகையாகவுள்ளன என தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் அது தொடர்பாக நுகர்வோரை விழிப்புணர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(xvi) தேசிய கடல்சார் தேசப் படங்களை ஆக்குவதற்கான செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டு ரூபா 8,340,000 இற்கான ஏற்பாடுகளில் இருந்து ரூபா 9,679,000 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் திட்டமிட்டிருந்த காங்கேசந்துறை துறைமுகத்திற்கு நுழையும் கடல்சார் வரைபடம், கொழும்பு முதல் வெலிகம வரையில் கடல்சார் தேசப்படங்கள், நுரைச்சோலை நிலக்கரி மின்வலு நிலையத்திற்கு நுழையும் கடல்சார் தேசப்படம், ஒலுவில் துறைமுகத்திற்கு நுழையும் கடல்சார் தேசப்படங்களை ஆக்குதல் மற்றும் நீரியல் கலை அளவை தரவுகளை நாளது வரைப்படுத்தல் ஆக விடயங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(xvii) செட்லயிட் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி ஆழமற்ற கடலில் நீரியல் அளவை தரவுகளை கணிக்கும் செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 920,000 இற்கான ஏற்பாடுகளில் இருந்து ரூபா 877,500 தொகையொன்று செலவிடப்பட்டிருந்த போதிலும் இந்த செயற்திட்டத்தின் மூலம் எதிர்ப்பார்த்த விளைவு ஆகிய ஆழ்கடலை வகைப்படுத்தும் வரைபடங்களை ஆக்கியிருக்கவில்லை.

(xviii) ஹிக்கடுவ சமுத்திர சரணாலய முருகைக் கற்பாறை மற்றும் விஷேட வேறுபட்ட தன்மைகள் மீதான சுற்றாடல் சார் ஆய்வு செயற்திட்டத்திற்காக ரூபா 230,000 இற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் ரூபா 207,800 தொகை செலவிடப்பட்டிருந்தது. முருகைக் கற்களின் வகைகள் மற்றும் சுற்றாடல்களின் பல்வேறு தன்மைகளின் தரவு களஞ்சியமொன்று பேணல் மற்றும் நன்மை பயக்காத தாக்கங்களை இனங்காணல், முருகைக் கல் விஷேடங்களின் வேறுபட்ட தன்மையை இனங்காணல், சுற்றாடல் முறைமை வேறுபடுவதை இனங்காணல், நீரின் நிலைமையினை தீர்மானித்தல் ஆகியன திட்டமிட்டிருந்த விடயங்கள் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(xix) வெலிகாமம் குடாவில் சிறு கடல்சார் மீன்களினால் காலத்திற்கு பொருத்தமானவையும், செயற்திட்டம் மற்றும் விஷேட கட்டமைப்பு மற்றும் நீர் பண்புசார் அளவீடு தொடர்பாக ஆய்வுகள் ஆகிய செயற்திட்டத்திற்காக ரூபா 200,000 இற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 181,300 தொகை செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நீரின் பொருண்மையான வித்தியாசங்களை கண்டுபிடித்திருந்த போதிலும் அதற்கமைய குறிப்பிட்ட காரணத்தை கண்டுபிடித்திருக்கவில்லை.

(இ) கடந்த ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கையின் பிரகாரம் மன்னார் மற்றும் நிலாவெளி பிரதேசங்களில் மீன்கள் உளதாய் இருத்தல் தொடர்பாக உயிரியல் பல்வகைமை விடயங்களை இனங்காணல் மற்றும் பெறுமதி மதிப்பீடு செய்தல் செயற்திட்டத்திற்காக ஒதுக்கியிருந்த ரூபா 1,000,000 தொகைக்கான தொகையில் ரூபா 884,292 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்டத்தின் முக்கிய தொழிற்பாடுகளான சுற்றாடல் முறைமை தொடர்பாக வரைபடம் ஒன்றினை தயாரித்தல் மற்றும் உயிரியல் பல்வகைமை விடயங்கள் தொடர்பாக பிரேரணைகள் சமர்ப்பித்தல் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. மேலும் கற்பிட்டி பகுதியில் கடல் ஆமைகளை இனப்பெருக்கல் மற்றும் செயற்திட்டம் தொடர்பாக விஷேட சந்தர்ப்பங்களை இனங்காணும் செயற்திட்டத்திற்காக ரூபா 600,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 250,131 செலவிடப்பட்டு தரவுகள் சேகரித்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. கடல் ஆமைகளில் செயற்திட்டத்தை விஞ்ஞான ரீதியான முகாமைத்துவப்படுத்துதல், கடல் ஆமைகளுக்காக பாதுகாப்பு மத்திய நிலையங்கள் நிறுவுதல் மற்றும் சுற்றாடலை நயக்கும் விதமாக உல்லாசப் பிரயாணிகளை ஈர்க்கக் கூடிய விதமாக பிரசித்தப்படுத்தல் ஆகிய செயற்பாடுகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் செயற்திட்டம் இடையில் நிறுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ தொழிற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகவராண்மையின் கற்பிட்டி ஆய்வு நிலையம், கப்பரதொட்ட நாரா பிராந்திய மத்திய நிலையம் மற்றும் ரெக்கவ பிராந்திய மத்திய நிலையம் என்பன அமைந்துள்ள காணிகள் முறையே ரூபா 31,885,000 தொகை ரூபா 3,597,700 தொகை மற்றும் ரூபா 17,918,200 தொகை என மொத்தப் பெறுமதி ரூபா 53,400,900 தொகைக்கான காணிகள் முகவராண்மைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்த 15 கணக்காய்வு அறிக்கைகளுக்கு பதில் அளிப்பதற்கு மற்றும் அவ்வறிக்கைகளிலுள்ள விதப்புரைகள் செயற்படுத்துவதற்கு முகாமை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) முகவராண்மையினால் மேற்கொள்ளப்படும் கற்கை ஆய்வுகள், பரீட்சித்துப் பார்த்தல் மற்றும் ஏனைய விசாரணைகள் மற்றும் ஆளமாக ஆய்தல் மற்றும் கண்டுபிடிப்புக்கள் தொடர்பாக பெற்றுக்கொள்ளும் தரவுகள், அறிக்கைகள் மற்றும் விவரம் உள்ளடங்கிய பதிவேடு ஒன்று பணிப்பாளர் நாயகத்தினால் பேணப்பட வேண்டும் என தேசிய நீரியல் வள ஆய்வு அபிவிருத்தி முகவராண்மை சட்டத்தின் பிரிவு 34 இன் பிரகாரம் பேணப்பட வேண்டும் எனவும் அவ்வாறான பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக வருடாந்தம் சேகரிக்கப்படும் தரவுகள் அதனோடு சமமான வேறு ஆய்வுகளுக்கு பயன்படுத்தக்கூடிய ஆற்றலை இழந்துள்ளது. இது தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.3 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்**

முகவராண்மையின் குறிக்கோள்களுக்கு புறம்பாக ரூபா 15,245,000 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த மீன் விற்பனை நிலையம் 2014 மார்ச் 21 திகதி முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையும் குறிக்கோள்சார் கருமங்களுக்காக பயன்படுத்தப்படாமல் செயற்படாது காணப்பட்டது. மேலும் இந்த நிர்மாண வேலைகள் தொடர்பான காணிகள் முகவராண்மைக்கு முறைப் பிரகாரம் உரித்தாக்குவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

02 படகுகள் உற்பத்தி செய்வதற்காக 02 அதிவிசைப் படகு என்ஜின்கள் கொள்வனவு செய்வதற்காக 2011 ஆண்டின் போது ரூபா 4,493,052 தொகையும் 02 படகுகள் உற்பத்தி செய்யும் விடயங்களுக்காக ரூபா 2,902,938 தொகையும் செலவிடப்பட்டிருந்த போதிலும் அவ் உற்பத்தி விடயங்கள் இடை நிறுத்தப்பட்டிருந்தது.

**4.5 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிற்றுண்டிச்சாலைக்காக கொள்வனவு செய்திருந்த ரூபா 120,000 தொகைக்கான தந்தூரி அடுப்பு மற்றும் ரூபா 352,800 தொகைக்கான பீங்கான் கழுவும் இயந்திரம் மற்றும் கொள்வனவு செய்திருந்த ரூபா 100,000 தொகைக்கான அலுமினிய ஏணி என்பன 2011 ஆண்டு முதல் கணக்காய்வுத் திகதியாகிய 2017 ஜுலை 31 திகதி வரையும் பயன்படுத்தப்படாமல் செயற்படாது காணப்பட்டது.

(ஆ) 2014 ஏப்ரல் மாதத்தின் போது ரூபா 76,800 தொகைக்கு கொள்வனவ செய்திருந்த கணனி மென்பொருள் ஒன்று கணக்காய்வுத் திகதியாகிய 2017 ஜுலை வரை பயன்படுத்தாமல் காணப்பட்டது.

**4.6 முறைசாரா விதமாக ஒப்படைக்கப்படாத காணிகளில் செயற்திட்டங்கள் ஆரம்பித்தல்**

தேசிய நீரியல் வளர்ப்பு அதிகார சபைக்கு உரித்துடைய பனாப்பிட்டிய பிரதேசத்து காணி ஒன்றின் உரிமையை ஒப்புக்கொள்ளாமலில் கடந்த ஆண்டின் போது முகவராண்மையினால் ரூபா 552,906 தொகை செலவிடப்பட்டு நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை அதன் உரிமை ஒப்படைத்திருக்கவில்லை.

**4.7 வேறு அரச நிறுவனங்களுக்கு வழங்கியிருந்த முகவராண்மையின் வளங்கள்**

முகவராண்மையின் 04 உத்தியோகத்தர்கள் வரிசை அமைச்சுக்கு மற்றும் வேறு நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டு அந்த உத்தியோகத்தர்களுக்காக மீளாய்வாண்டின் போது படியாக ரூபா 1,736,502 தொகை முகவராண்மையினால் செலுத்தப்பட்டிருந்தது.

**4.8 பதவியணியினர் நிருவாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணிப்பாளர் நிருவாகம் மற்றும் மனிதவள உதவிப் பணிப்பாளர், உதவி பணிப்பாளர் (நிருவாகம்) மற்றும் ஆய்வு அலுவல்களுக்காக நேரடியாக தொடர்புடைய 27 பதவிகளில் 88 வெற்றிடங்கள் காணப்படல் நிறுவனங்களின் அலுவல்கள் நடாத்திச் செல்வதற்கு பிரதிகூல நிலைய தாக்கங்கள் ஏற்படுத்துகின்றன என அவதானிக்கப்பட்டது. மேலும் பதவிகளுக்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் 03 மேலதிக விஞ்ஞானிகளை சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஆ) 2014 நவம்பர் மாதத்தில் இருந்து பணிப்பாளர் (மனித வளம்) பதவியின் அலுவல்கள், பதில் கடமை உத்தியோகத்தரினால் மேவகை செய்யப்பட்டிருந்ததுடன் அப் பதவிக்காக நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2003 ஜுன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 இலக்க பொது முயற்சிச் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களில் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், முகவராண்மையினால் மீளாய்வாண்டிற்காக நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது 98 நாட்கள் தாமதத்துடன் அதாவது 2017 ஜுன் 06 திகதியே. மேலும் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வரைவு வருடாந்த அறிக்கை சமர்ப்பித்திருக்கவில்லை.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் மாதாந்த கணக்குகள், இருப்புக் கட்டுப்பாடு, முற்பணங்கள் வழங்கள், செயற்திட்டங்கள் அமுல் நடத்துதல் மற்றும் பெறுகைகள் நடவடிக்கைகள் ஆகிய 10 பரப்புகள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 5.3 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்

கரையோர வலயத்தில் ஆய்வு விடயங்களுக்காக 2012 ஆண்டின் போது ரூபா 15,685,632 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த ‘‘தரணீ’’ படகு மீளாய்வாண்டு இறுதி வரை குறிப்பிட்ட விடயத்திற்காக பயன்படுத்தியிருக்காததுடன், 2014 நவம்பர் 12 ஆம் திகதி நடைபெற்ற பொது முயற்சிகளுக்காக குழுக் கூட்டத்தில் குறிப்பிட்ட கப்பல் விற்பனை செய்யப்பட வேண்டும் என கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் 2017 ஆகஸ்ட் 04 திகதி வரை விற்பனை செய்திருக்கவில்லை. எவ்வாறாயினும் இந்த படகு நிர்மாணித்த நாள் முதல் மீளாய்வாண்டு இறுதி வரை படகில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் சம்பளங்கள், மேலதிக நேரப்படி மற்றும் பாதுகாப்பு விடயங்களுக்காக ரூபா 8,068,524 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் குறைபாடுகள் அவ்வப்போது முகவராண்மையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல் | சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் குறிப்பிட்ட நாட்களில் சமர்ப்பிக்காமை. |
| (ஆ) | உள்ளகக் கணக்காய்வு | கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படாமை. |

| | | |
|---|---|---|
| (இ) | பதவியணியினர் நிருவாகம் | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஈ) | பண்டக் கணிப்பீடு | வருடாந்த கணிப்பீடு மேற்கொள்வதில் தாமதம் காணப்படல். |
| (உ) | செயற்பாட்டுக் கட்டுப்பாடு | (i) மீனவர் சமூக அபிவிருத்தி மற்றும் மேம்படுத்தலுக்காக நிறுவப்பட்டுள்ள மீனவத் தொழிலுடன் தொடர்புடைய நிறுவனங்களின் பிரச்சினைகளை இனங்கண்டு தேவையான ஆய்வுகள், ஆராய்ச்சிகள் மற்றும் ஆலோசனைகள் வழங்குவதற்காக திட்டமிடாமை. |
| | | (ii) மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மீனவச் சமூகத்தவர்களிடம் பிரசித்தப்படுத்துதல், அவற்றை அபிவிருத்தி செய்தல் அதற்கு தேவையான ஆலோசனைகள் ஒழுங்கு முறைப்படி வழங்குவதற்கு போதியளவு வேலைத்திட்டமொன்று காணப்படாமை. |
| | | (iii) நன்னீர் நீர்தேக்கங்களில் நீரை காலத்திற்கு காலம் பரிசோதனை மேற்கொள்ளல் மற்றும் நன்னீர் மீன்களை மேம்படுத்தல் தொடர்பாக தேவையான ஆய்வுகள் மேற்கொள்ளப்படாமை. |
| | | (iv) நன்னீர் மீன் விளைச்சல்கள் தொடர்பாக கணிப்பீடுகள் மேற்கொள்ளப்படாமை. |
| | | (v) ஆய்வுகளுக்கு தேவையான தரவுகள் சேகரித்தல் மற்றும் தகவல் நிலையமொன்றாக செயற்படாமை. |
| | | (vi) ஆய்வு அறிக்கைகள் அவை தொடர்பாக அக்கரையுடைய தரப்பினருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |